கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்,
வடக்கு மாகாண சபை.
2021.07.06

சுற்றறிக்கை இல - 03/2021

சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கட்கும்,

**அசையும், அசையா ஆதனகொள்ளல், விற்றல், நன்கொடையாகப் பெறல் அல்லது வேறுவகையாகப் பெறல்,குத்தகைக்கு கொடுத்தல் அல்லது கொடுத்து மாறுதல் அல்லது வேறுவகையில் கையாளல்.**

வடமாகாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவுச் சட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக காணிகள், கட்டடங்கள் அல்லது வேறு அசைவற்ற ஆதனத்தினைக் கொள்வனவு செய்தல், நன்கொடையாகப் பெறுதல் அல்லது வேறுவகையாக கொள்வனவு செய்தல் அல்லது குத்தகைக்கு எடுத்தல் அல்லது காணிகள் கட்டடங்களை அல்லது வேறு அசைவற்ற ஆதனத்தினை விற்பனை செய்தல், ஈடு வைத்தல், குத்தகைக்கு விடுதல், கொடுத்துமாறுதல் அல்லது வேறுவகையாகக் கையளித்தல் தொடர்பாக, சில கூட்டுறவுச் சங்கங்களால் முன்னனுமதியின்றி செயற்பாடுகள் இடம்பெறுவதனை என்னால் அவதானிக்க முடிகின்றது. கூட்டுறவுச் சங்கங்களின் நிதிநிலைமை மற்றும் பௌதீகவள பாதுகாப்பு என்பவற்றை கருத்தில் கொள்ளாது மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் கூட்டுறவுச் சங்கங்களில் நிலைபேறான அபிவிருத்திக்கு குந்தகம் விளைவிப்பதாக அமைந்துவிடுகின்றன.

எனவே கூட்டுறவுச் சங்கங்கள் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல் ,விற்பனைசெய்தல், உடமையாக்குதல், மூலதனச் செலவாகக் கணிக்கப்படும் நிலையான சொத்துக்கள் மீதுமேற்கொள்ளப்படும் செலவினங்கள் தொடர்பாக எனது 3/2004 இலக்க 10.02.2004, 02/2006 இலக்க 04.05.2006 ஆகிய திகதிகளில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் பால்தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

3/2004 இலக்க,02/2006 இலக்க சுற்றறிக்கைகளை சரிவரகடைப்பிடிப்பதன் மூலம் சங்கத்தினது வளங்கள் பாதுகாக்கப்படுவதுடன் சட்டரீதியான தேவைப்பாடுகளும் பூர்த்தியாக்கப்படுமென்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

சுற்றறிக்கை 2003.02.21ந் திகதிய 01/2003 சுற்றறிக்கையில் 3வது பந்தியின் 3.1, 3.2 பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள உச்ச எல்லையினை ரூபா 500000.00 (ஐந்து இலட்சம்) என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் எனது 2004.02.10ந் திகதிய 3/2004 சுற்றறிக்கைக்கு அமைய செவ்வைநிரல் பூர்த்தி செய்யப்பட்டு இணைக்கப்படல் வேண்டுமென்பதுடன், தங்களால் வழங்கப்படும் சொத்துக் கொள்வனவு, விற்பனை தொடர்பான ஒவ்வொரு அனுமதி கடிதத்தினதும் பிரதி ஒன்று எனக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மு.நந்தகோபாலன்
கூட்டுறவுஅபிவிருத்திஆணையாளரும்,
கூட்டுறவுசங்கங்களின் பதிவாளரும்,
வடமாகாணம்.

மு.நந்தகோபாலன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வடக்கு மாகாண சபை